Date : 29.07.2026

DW.1 : நிஷாம்மாள்

DW.1 மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கின் 1ம் பிரதிவாதி என் மகன் என்றால் சரிதான். நான் அவர் வாங்கிய கடனுக்கு உத்தரவாதம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 வங்கி கடன் கோரி தாக்கல் செய்த விண்ணப்பத்திலும் மேற்படி முகவரிதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கல்வி கடனுக்கு வாதி வங்கியில் நானும் 1ம் பிரதிவாதியும் மனு செய்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ல் உள்ள புகைப்படமும் கையெழுத்தும் என்னுடையதுதான் என்றால் சரிதான். மற்றொரு கையொழுத்து என் மகனின் கையெழுத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கேப் பாலிடெக்னிக் கல்லூரி ஆரல்வாய் மொழியில் படித்து விட்டு தற்போது வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். வாதி வங்கி கல்வி கடனாக ரூ.90 ஆயிரம் வழங்கியது என்றால் சரிதான். என் மகன் படிப்பை எப்போது முடித்தார் என்றால் நியாபகம் இல்லை. வேலை கிடைத்து எந்த வருடம் என்றால் 2018 ம் வருடம். எவ்வளவு பணம் திரும்ப செலுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நகைக்கடன் இரசீது அனைத்தும் என் மகன் பெயரில் உள்ளது. தங்க நகைக்கடன் கணக்கு என்னுடையது என்றால் சரியல்ல. அடமான நகைகள் ஏலம் விடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீதம் உள்ள தொகையான ரூ.10 ஆயிரம் கல்வி கடனுக்கு அடைத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விவரம் வா.சா.ஆ-12 ஆவணத்தில் துலங்கும் என்றால் தெரியாது. 05.12.2019 ம் தேதிவரை 1, 2 பிரதிவாதிகளாகிய நாங்கள் 3,72,000 அசலும் வட்டியுமாக நிலுவை வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. ஏல தொகை என்னுடைய நகையை ஏலம்விடப்பட்டதில் உள்ள தொகை என்றால் சரியல்ல. வங்கி விதிகளின் படி கல்விகடனுக்காக வாங்கி பணத்தை 1ம் பிரதிவாதி செலுத்தாததால் 2ம் பிரதிவாதியாகிய நான் செலுத்த கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் கூட்டாக கடனை செலுத்த கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல.